# 3

# பரிசுத்த வாரம் தரும் நற்செய்திப்பணிப் பாடங்கள்

Lessons on Evangelism from the Holy Week

## *முகவுரை*

- முழுவுலகின் இரட்சிப்புக்காகவே கிறிஸ்து பாடுபட்டார் —
  1 யோ 2:2

  கிறிஸ்து: *''நான் உயர்த்தப்படும்போது எல்லா மனிதரையும் ...''*
  யோ 12:32

  எ.கா.) ஏசாயா 53இலிருந்து எத்தியோப்பிய மந்திரிக்குப் பிலிப்பு பிரசங்கித்தான் — அப் 8:32,33,35

  இதுதான் கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய மிக முக்கிய அத்தியாயம்.

- துவக்கமுதல் முடிவு வரை ஆண்டவர் ஆத்தும பாரம் கொண்டிருந்தார்; இறுதி வாரத்திலோ அது உச்சத்தை எட்டியது.

  பாடுகளின் வாரத்தின் ஒவ்வொரு நிகழ்வும் மிஷனரி நற்செய்திப் பணிக்குப் பயனுள்ள பாடங்களைத் தருகிறது.
  குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை: 7 நிகழ்வுகள்

### *1. கட்டப்பட்டிருந்த கழுதை* (Tethered Donkey)

மத் 21:1-3

இச்சம்பவத்திலிருந்து 6 பாடங்கள் —

அ) கிராம ஊழியம் குறித்த சித்திரம் —

கிராமங்களில் இந்தியா வாழ்கிறது ... 80%
(நகரமயம் இந்நாட்களில் அதிகரித்தாலும் ...)

''கிராமங்கள் செழித்தால் நாடு செழிக்கும்'' — மொரார்ஜி தேசாய்

ஆனால் நமது பணிகளில் 80 சதவீதம் 20 சதவீதத்தினராகிய நகர்வாசிகளிடையே நடக்கிறது.
6,00,000 கிராமங்கள் ... கிறிஸ்தவரே இல்லாதவை ஏராளம்.



ஒரு கிராமத்திலுள்ள பெட்டிக்கடையினரிடம் ஒரு மிஷனரி:
''உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா?''
பதில்: ''அதை நான் இங்கு விற்பதில்லை!''

வயதானதொரு கிராமத்தாளிடம் ஒரு சுவிசேஷகர்:
''இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''
பதில்: ''அவர் இந்த ஊரில் இல்லை!''

அரசுத் திட்டங்கள்: கிராமத்தினரிடம் கணினிகள், கைபேசிகள்

ஆ) அந்தக் கழுதைபோல் மக்கள் மூட நம்பிக்கைகள், வாழ்நாளெல்லாம் பயங்கள், போன்றவற்றால் கட்டப்பட்டுள்ளனர் —

| | | | |
|---|---|---|---|
| எ.கா.) | ஒடிசா | — | போண்டோ இனப் பெண்கள் ... அரை நிர்வாணம் |
| | ராஜஸ்தான் | — | குழந்தைத் திருமணங்கள் |
| | கர்நாடகம் | — | கோவில்களில் விபசாரப் பழக்கங்கள் |
| | ம. பிரதேசம் | — | காய வைத்த கம்பியால் சூடு போடும் பில்லிசூனிய மருத்துவர் |

''உடன்கட்டையேறுதலுக்கு'' எதிராய் எழும்பும் கேரிகள் தேவை!
நாம் நாசரேத்தை விட்டு நப்தலிக்கு இடம் பெயராவிடில்,
மக்கள் மரண இருளிலேயே தவிப்பர் (மத் 4:13-16)

இ) கழுதைக்குட்டியும் கட்டப்பட்டிருந்தது —
''குற்றமில்லாப் பாலகர்''

சிறுவர், சிறுமியரது உற்சாகம்.
*''பரலோக இராஜ்யம் அவர்களுடையது!''*
எ.கா.) விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS)
பல மிஷனரி இயக்கங்களைப் பிறப்பித்தது.

ஈ) இயேசு இரு சீடரை அனுப்பினார் —
*''இரண்டிரண்டு பேராக''* (லூக் 10:1)
பத்து பன்னிரண்டுபேர் வரக் காத்திருக்காதீர்; இருவர் போதும்.
ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் போல் தம்பதியர் குழு.

உ) இயேசு உட்கார்ந்து பவனி வந்தது ஒரு பெண் கழுதைமேல்!
பெண் ஊழியர் —

பண்டித ராமாபாய் — முக்தி மிஷன் (மகாராஷ்டிரம்)
ஏமி கார்மைக்கல் — டோனாவூர் ஐக்கியம் (தமிழகம்)
மேரி ஸ்லெசர் — நரமாம்சம் தின்போர் (ஆப்பிரிக்கா)

ஊ) *''ஆண்டவருக்கு அவை வேண்டும்!''*

எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள்

*''சகல அதிகாரம் ... ஆகையால் புறப்பட்டுப் போங்கள்''*

(மத் 28:18,19)

## *2. திறந்தவெளிப் பவனி* (Open-air Procession)

(மத் 21:7-10)

- மக்கள் கூட்டத்தினரிடையே தாக்கம் —

  *''நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு ...''*

  — தெருக்களில் ... ஆலயத்திற்குள்ளேயே அல்ல!

  — ஆலயத்தின் 4 சுவர்களுக்குள் இயேசு அடைபட்டிருக்கிறார்.

  — கிறிஸ்மஸ் பாடல் பவனியும் இப்படித்தான்

  (தூங்கும் கிறிஸ்தோரை எழுப்பும் தூக்கக் கிறிஸ்தோர்)

  — ஆலயக் காம்பவுண்டையே சுற்றுவது ...

  எருசலேமுக்கு வெளியே திருடர் நடுவிலேயே

  இயேசு சிலுவையிலறையப்பட்டார் (எபி 13:12,13).

- தெருக்களில் சுவிசேஷப்பவனி செல்லுங்கள் —

  சிறு குழுக்களாயாவது செல்லலாமே!

  எ.கா.) அன்றைய இரட்சண்ய சேனையினர்.

  ஜெபக்கூட்டம் → சந்தைக் கூட்டம்

  (அப் 17:17) ... கூட்டங்களுக்கும் தனிநபர்களுக்கும்

  மட்டுமல்ல, 20:20 தரிசனம்!

  பொது விடுமுறை நாட்களில், உள்ளூர்ச் சபைகளெல்லாம்
  இவ்விதப் பொது நிகழ்ச்சிகள் நடத்தலாமே.

- யோவான் ஸ்நானகன் —

  ஆலயத்திற்கு வெளியேதான்! (லூக் 3:2,6)

  அவனைப் பின்பற்றுவோம் —

  *''இதுவரை ... பலவந்தம் ... பிடிப்பு''* (மத் 11:12)

  *தெருக்கள் ... வீதிகள் ... வழிச் சந்திகள்* (மத் 22:9,10; லூக் 14:21)

  இயேசு: *கடலோரங்கள் ... மலைகள் ... கல்லறைகள்*

  தொலைந்தோர், தொய்ந்தோர், தொடப்படாதோர் —
  இவர்களால் விருந்து சாலையை நிரப்புங்கள் (லூக் 14:23)



- வெளிப்பிரசங்க ஊழியம் கடினம்தான் —

  ''உங்கள் ஆடைகள் அழுக்காகும்'' (மத் 21:7,8)

  இயேசு தமது ஆடைகளில் இரத்தக்கறையோடு தேவ கோபத்தின்
  ஆலையைத் தனியாய் மிதிக்கவில்லையா?(ஏசா 63:3)

- கவரும் அட்டைகள், நல்ல அடையாளங்கள், கிளரும் முழக்கங்கள்
  ... கலைத்திறன் ஆவியானவர் தரும் வரம் (யாத் 31:1-5).

  தங்கள் திறமைகளைப் பயன்படுத்த வாலிபருக்கு வாய்ப்பு —
  எ.கா.) ஆடைகளைத் தரையில் விரித்தது மக்களாகவே செய்தது!

  வாலிபரின் உற்சாகத்தின்மீது குளிர்நீர் கொட்டாதேயுங்கள் —

  மத் 21:15,16 — *''அவர்களை அமைதிப்படுத்தும்!''*

  எ.கா.) துவக்கக் காலங்களில் என்னை ஊக்குவித்தோர் —

  Rev. K.S. ஆபிரகாம் (FMPB)

  Rev. P. ஜெபமணி (சாம் அண்ணாச்சியின் அண்ணன்)

  தெருச்சந்திகளில் இசைக்கருவிகள் வாசிக்கலாம் —

  எ.கா.) எங்கள் கல்லூரி நாட்கள்: தகர மெகாபோன்,

  ஜாலர், கொட்டு; தெருக்களில் அமைதி சாட்சி

## *3. துர்ப்பிரயோகிக்கப்பட்ட ஆலயம்* (Misused Temple)

மாற் 11:15-17 ... *எல்லா நாட்டினருக்கும் ஜெபவீடு*

நமது ஆலயங்கள் —

ஊழல் மையங்கள்

வழக்குகள், வேண்டா விவாதங்கள்

நமது ஆலயங்களுக்குப் பல்வேறு பெயர்கள் வைக்கிறோம்;
யேகோவா தேவன் சூட்டியதோ: ***''ஜெப வீடு''***

*''எல்லா'' மக்களுக்கும்*—கிறிஸ்தவரல்லாதோரைக் கவரும் நிகழ்ச்சிகள்

சாலொமோனின் தேவாலயப் பிரதிஷ்டை ஜெபம் —

1 இரா 8:41-43 ... *வேற்றினத்தார் ...*

ஜெபத்தின் முடிவு (வச 59):

*''பூவுலகின் மக்களெல்லாம் அறியும்படி''* ...

மிஷனரி ஜெபக் கூடுகைகளில் பங்குபெறுவோர் குறைவு.

சபை மேய்ப்பர்களே, நான்கு ஞாயிறு ஆராதனைகளில்
ஒன்றை மிஷனரி ஜெபக்கூட்டமாய் மாற்றிவிடுங்கள்!

மக்களை மாற்றமுடியாது என்று சொல்லாதிருங்கள்!

சபையை மாற்றமுடியாவிட்டால்
சமுதாயத்தை மாற்றுவதெப்படி?

ஆஸ்வால்டு ஸ்மித் —

''நற்செய்தி அறிவிக்காத சபை உறைந்துபோகும்!''
(The Church that does not evangelize will fossilize!)

கட்டிடங்கள் நினைவுச் சின்னங்களாகிவிடுகின்றன.

கட்டிடங்களைப் பார்த்து இயேசு அசந்துவிடவில்லை —
(மாற் 13:1,2) ... கி.பி. 70 ... ரோமரால் அழிக்கப்பட்டது.

ஆதிச்சபையின் இரகசியம்: சலனப் பிரசங்க பீடங்கள்.
(Mobile pulpits)

கட்டிடங்களில் அளவிற்கு மீறிச் செலவழிக்கிறோம் —

இருக்கைகளுக்கு மெத்தைகள் ... (Cushioning)
தரைகளுக்கு விரிப்புகள் ... (Carpeting)
அறைகளுக்குக் குளிர்சாதனங்கள் ... (Conditioning)
பீடத்திற்குத் தொங்குதிரை ... (Curtaining)
சுவர்களுக்கு வர்ணம் ... (Colouring)
ஆனால் பணிக்களங்களில் எத்தனையோ
ஆலயங்களுக்குக் கூரைகூட கிடையாது! (Covering)

மெகா சபைகள்: 10,000 பேர் கூடக்கூடிய ஒரே அரங்கத்தைவிட
1000 பேர் கூடக்கூடிய 10 அரங்கங்கள் மேல்!

- இன்னொரு படிப்பினை:

— பலி செலுத்தத்தான் புறாக்கள் விற்கப்பட்டன.
— ஆலய வரி கட்டத்தான் பணத்தை மாற்ற காசுக்காரர்.

வியாபாரமய மார்க்கம் *(''கள்ளர் குகை'')*



பணக்காரியங்கள் குறித்து அதிகம் பேசாதீர் —
எ.கா.) கடந்த வாரக் காணிக்கையா,
கடந்தவாரம் திருமுழுக்கெடுத்தவர் எண்ணிக்கையா?
எது முக்கியம்?

### *4. கனியற்ற மரம்* (Fruitless Tree)

மத் 21:18,19

கவனிக்கவேண்டிய 3 காரியங்கள்:

அ) கனியற்ற கிறிஸ்தவன் — முரண்பாடு

பிறரை இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்.
ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம் (ஆபிரகாம், ஆதி 12:2)
யோ 15:16, *''கனிகொடுக்க உங்களைத் தெரிந்துகொண்டேன்''*
மத் 4:19, *''என் பின்னே வாருங்கள் ... மனிதரைப் பிடிப்போர்''*
கனிகொடுக்கவேண்டியது கட்டாயம்!

கனியின்மை என்பது சோபேறித்தனமல்ல, அது *பொல்லாப்பு* —
மத் 25:26

ஆ) அந்த மரத்தின் பொய்த் தோற்றம்
மொத்த செயல்பாடுகள், அறிக்கைகளினால் ஏமாற்றாதீர்கள் —
''தனிப்பட்டவரது'' பொறுப்பு —
வெளி 22:12 ... *''எவனும் ...''*
5 தாலந்து ... 2 தாலந்து ... *''எவனுக்கு அதிகம் ...''*

இ) அந்த மரம் உடனே சபிக்கப்பட்டது —

இன்னொரு உவமை (லூக் 13:6-9)

3 ஆண்டுகள் & 4ஆம் ஆண்டு (திராட்சைத்தோட்டத்தில் அத்தி)

இது வச 1-5ஐத் தொடர்ந்து...*''நீங்கள் மனந்திரும்பாவிட்டால்''*

2004 சுனாமியில் நாம் காப்பாற்றப்பட்டதேன்?
செலவழியுங்கள்: தருணம் ... தாலந்து ... தனம்

### *5. தியாகப் பெண்மணிகள்* (Sacrificial Women)

செவ்வாய் அன்று இரு நிகழ்வுகள் —
அ) ஏழை விதவை (2 காசு) (மாற் 12:41-44)
ஆ) ஒரு பெண்மணி (நளதம்) (மத் 26:6-13)

படிப்பினைகள் —

i) தங்களது எதிர்காலத்திற்காய்க் கர்த்தரையே நம்பினர்.

அ) விதவை: *அவளுக்கு இருந்ததையெல்லாம் போட்டாள்*

ஆ) பெண்மணி: ஓராண்டு சம்பாத்தியம் ...

மணமகனுக்கு ரொக்கம்?

ii) அகிலவுலக நற்செய்திப்பணியுடன் இணைப்பு: மத் 26:14-16

எ.கா.) C.T. ஸ்டட்... எல்லாவற்றையும் மிஷனரிப்பணிக்கு ...

தனது மணப்பெண்ணுக்காய் வைத்திருந்ததையும்!

உங்கள் சபையின் பட்ஜெட் —

முக்கியச் செலவு எது?

ஜான் வெஸ்லி: ''தனது அங்கத்தினரல்லாதோரின் நலனுக்காய்ப் பாடுபடும் ஒரே அமைப்பு திருச்சபைதான்!''

''உலகமே எனது சபை!''

- வெறுமனே தசமபாகம் மட்டும் கொடுக்கும் பழைய ஏற்பாட்டு மனப்பான்மையிலிருந்து வெளிவாருங்கள் —

அது கிறிஸ்துவிடம் நம்மை *''நடத்துவதற்காகவே''* (கலா 3:24,25)

அங்கே துவங்கலாம், அங்கேயே தங்கக்கூடாது!

- அதே நாளில் ... யூதாஸ் உடன்பட்ட திட்டம்

மத் 26:13-13 ... *''அப்பொழுது''* ... (வச 14)

மாற் 14:9-11 ... *''அப்பொழுது''* (வச 10)

அந்தப் பெண்ணுக்கு: ஓராண்டுச் சம்பாத்தியம் கர்த்தரைவிடச் சிறியது.
யூதாசுக்கு: ஒரு மாதச் சம்பாத்தியம் கர்த்தரைவிடப் பெரியது.

### *6. பயமற்ற சாட்சி* (Fearless Witness)

யோ 18:37 ... பிலாத்துவுக்குமுன் ...

அ) ஜெபத்தினால் — *உற்சாக ஆவி ... பலவீன உடல்* (மத் 26:39-41)

பேதுரு மும்முறை மறுதலித்தான் (மத் 26:40)
இயேசுவோ மும்முறை சாட்சியளித்தார் ...
*''நான்தான் அவர்''* (யோ 18:4-8)



முழங்காலில் தோல்வி ...
பயமுறுத்தலால் ஒடிந்து போதல் ...
ஆதி அப்போஸ்தலர்... *''ஜெப வேளை''* (Hour of Prayer) (அப் 3:1)
*''ஜெப வீடு''* (House of Prayer)

ஆ) ஆவியின் அபிஷேகத்தால் —

சபை கட்டுதலும் போராட்டமும் சேர்ந்தே நடக்கும் (மத் 16:18)
*''பலத்தினாலும் அல்ல ... எனது ஆவியினாலேயே''* (சக 4:6)
ஆலயம் கட்டுதல் (வச 9)

ஆன்மீகப் போராட்டங்களுக்கு உதவாதவை ...

— புத்தி சாதுரியம் (Intellectual brilliance)
— பேச்சுத் திறன் (Oratorical skill)
— விஞ்ஞான அறிவு (Technological expertise)
— சமுதாய அந்தஸ்து (Social status)
— பணபலம் (Financial power)
— நிறுவனப் புகழ் (Institutional strength)

தீமோத்தேயுவை உற்சாகப்படுத்த இயேசுவைப் பவுல் சுட்டிக்காட்டினார் —

1 தீமோ 6:12,13 ... *பொந்தியு பிலாத்துவுக்குமுன் ...*

எங்கும் துன்புறுத்தல்கள்.

இரத்த சாட்சிகளின் காலம் முடிந்துவிடவில்லை.

### *7. சிலுவைக் கள்ளன்* (Dying Thief)

லூக் 23:39-43

- தனியாள் ஆத்துமாதாயம்

இயேசு ... நிக்கொதேமு
சகேயு
தொலைந்த ஆடு

அவர் எங்கும் தனியாள் ஆத்துமாதாயகராயிருந்தார்.

மனிதரை மனிதராய்ப் பார்க்க நமக்கு இரண்டாம் தொடுதல் தேவை; மனிதரை ஆத்துமாக்களாய்ப் பார்க்க நமக்கு மூன்றாம் தொடுதலும் தேவை (மாற் 8:22-25).

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை! (Each one, reach one!)

பொதுக்கூட்டங்களில் அதிகப்பணம் விரயமாகிறது —
நற்செய்திப் பொதுக்கூட்டங்கள் தடைசெய்யயப்படலாம்;
ஆனால் தனியாள் ஆத்துமாதாயப்பணியை யார் தடுக்கமுடியும்?

T.L. ஆஸ்போர்ன்: தனியாள் ஆத்துமாதாயப்பணியில் மறுமலர்ச்சி உண்டாவதே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைத் திரும்பக் கண்டுபிடிப்பதாகும்.

***முடிவுரை***

1. கிராமங்களுக்குச் சென்று மக்களைக் கட்டுகளிலிருந்து விடுவியுங்கள்.
2. திறந்த வெளிப் பிரசங்கங்கள் நடத்துங்கள்.
3. கட்டிடங்களில் அதிகப் பணம் செலவழிக்காதிருங்கள்.
4. உங்கள் வாழ்நாட்களைத் தேவன் கூட்டியுள்ளதேன் எனப் புரிந்துகொள்ளுங்கள்.
5. மிஷனரிப்பணிகளுக்குத் தாராளமாய்க் கொடுங்கள்.
6. பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருங்கள்.
7. தனியாள் ஆத்துமாதாயப்பணிக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

அப்பொழுதுதான்,

சிலுவையிலறையப்பட்ட இரட்சகர் *''தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியடைவார்''* (ஏசா 53:11)